முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.05.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **சுடர் கண்ட அரங்கராசனே**
**சுடர் வென்ற ஞானதேசிகனே**
**இடர் வென்று மக்களை மீட்க**
**ஏழாம் படை வீட்டு சக்தியாக வந்த**
2. வந்தநல் ஆறுமுக ஞானியே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட நித்ய பிரசன்ன ஆசி
செப்பிடுவேன் **விகாரி தகர் திங்கள்**
3. **திங்களிலே இருபான் நவதிகதி கதிர் வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு பாம்பாட்டிச்சித்தர் யானும்**
**ஓங்கார உலகமமைய உரைப்பேன்**
**ஓங்கார குடிலின் பெருமை தன்னை**
4. தன்னிலே உலகம் அறிகின்ற காலம்
தரும உலகாக மாற்றம் காணும்
அண்ணல் அரங்கனை அகிலத்தார்
அறிகின்ற காலமே ஞானிகள் மேலும்
5. மேலும் கலிகால சித்தர்களாக
மேன்மை கருதி வரும் நிலை உருவாகும்
ஞாலமதில் அன்னதானமெனும்
நற்சேவையில் கலந்திருக்கும் மக்களே
6. மக்களே தரும பலத்துடன்
மகான் அரங்க ஞானி ஆசி பெற்று
தேக்கமிலா ஞானிகளை பூஜித்து
தொடர்ந்து தருமவழி நடக்க
7. நடக்கவே கலிகால துன்பங்கள்
நல்கா விலகி பாதுகாப்பும்
இடர் என்பது இல்லாத
ஏற்றமும் மாற்றமும் காண்கும்
8. காண்கவே காலம் தாழ்த்தா
கலியுக மக்களே ஒன்றிணைந்து
உண்மை ஆன்மீக ஞானநெறி
உயர் வள்ளல் காட்டும் சைவநெறி
9. நெறி பிறழா தொடர்ந்து வந்து
ஞானதேசிகன் அருளுகின்ற
அரிய உபதேசங்களை ஏற்று
அரங்கா முருகா என வணங்கி வர

10. வருகவே மக்களுக்கு மனபலமும்
வல்லமையானச் சூழலும் அமைந்து
தருமபலம் பெருகி வருவதுடன்
தயவு குணம் வளர்ந்து மக்கள் எல்லாம்

11. மக்களெல்லாம் ஞானவான்களாவர்
மண்ணுலகே ஞானிகள் பலம் கூடி
ஆக்கமான ஞானயுகம் ஆகும்
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அருட்ஜோதியை தம்முள் கண்டு விட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஜோதிச்சுடரை வென்று ஜோதி மயமாகி நிற்கும் ஞானதேசிகனே, இடர்களை வென்று மக்களை மீட்டு காத்திடவே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் மகா சக்தியாக வந்திட்ட ஆறுமுகப் பெருமானின் அவதாரமே, ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே, அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஞானஉலகம் அமைந்திடவே விகாரி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிற்றுக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பாம்பாட்டிசித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பாம்பாட்டிசித்தர்.

கலியுக மாற்றத்திற்காக சர்வ வல்லமையுடன் உருவாக்கப்பட்ட துறையூர் ஓங்காரக்குடிலினை இவ்வுலகம் அறிந்து கொள்கின்ற காலத்தினிலே, இவ்வுலகம் தருமஉலகமாக மாறிடும். அண்ணல் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்கள் அறிகின்ற காலமே ஞானிகளெல்லாம் கலியுக சித்தர்களாக ஆகி இவ்வுலகினில் யுகமாற்றத்திற்காக வெளிப்படும் நிலை உருவாகும்.

உலகினில் ஆறுமுக அரங்கன் நடத்தும் அன்னதான சேவையில் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வருகின்ற மக்களே அற்புதமாய் தருமபலத்தினை பெறுவார்கள். தருமபலத்துடன் அரங்கன் கூறும் தூயநெறிக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு ஞானிகளை பூஜித்து தொடர்ந்து தருமத்தின் வழியில் நடந்திட கலிகால துன்பங்கள் எல்லாம் அவர்களை அணுகாமல் விலகி ஞானிகளின் அருள் பாதுகாப்பை பெறுவார்கள். துன்பம் என்பதே இல்லாத நல்வாழ்வாக வாழ்வதுடன் நல்மாற்றங்களும் முன்னேற்றமும் கூடிய உயர் வாழ்வை பெறுவார்கள்.

ஆதலினாலே உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் நீங்களெல்லாம் ஒன்றிணைந்து உயர் வள்ளல் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் உண்மை ஆன்மீக ஞானநெறியினை உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுக்கும் சைவநெறியினை ஏற்று, நெறி பிறழாது தொடர்ந்து நடந்து ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகான் அருளுகின்ற உபதேசங்களை ஏற்று கடைப்பிடித்து மனம் உருகி அரங்கா அரங்கா முருகா முருகா என்றே தினம்தினம் மறவாமல் வணங்கிவர, மக்களுக்கு மனோபலம் பெருகிடும். வல்லமைமிக்க நல்ல சூழ்நிலையும் அமையப் பெற்று உலகினில் தருமபலம் பெருகி வருவதுடன் மக்களுக்கு தயவு குணம் பெருகிடும். மக்களெல்லாம் ஞானவான்களாக ஆகிடுவார்கள், இந்த உலகமே ஞானம் பலம் கூடி ஞானிகளின் பலமும் பெருகி ஆக்கமும் ஊக்கமும் ஞானமும்மிக்க ஞானயுகம் இனிதே உருவாகிடும் எனக் கூறுகிறார் மகான் பாம்பாட்டிசித்தர்.

–சுபம்–